நாள்: 21.07.2025
OS.191/2019
பெயர் ராஜமாணிக்கம்
வா.சா.3

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) பெரியகுளம் சார்பு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட சுழற்சி முறை தீர்ப்பாணையில் இந்து சமய அறநிலையத்துறை வழக்கு தரப்பினரா என்றால் தரப்பினர் அல்ல, ஆனால் மதுரையில் இந்து சமய அறநிலை துறை அலுவலகத்தில் வைத்து அந்த தீர்ப்பாணையை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் சுழற்சிமுறை தீர்ப்பாணையில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. சமுதாய சொத்துக்கள் குறித்து சுழற்சி முறை தீர்ப்பாணையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. அதில் வேளாளர் பெருமக்கள் சங்க கட்டிடம் மற்றும் கருமாரி தோப்பு சொல்லப்பட்டுள்ளது. காரிமாரித்தோப்பு இப்பொழுது வாதி அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம்.

2) சின்னமனூர் வேளாளர் பெருமக்கள் சங்கம் தான் சொத்துக்களை நிர்வகித்து வருகிறது. சின்னமனூரில் தங்கவேல் பிள்ளை உறவின்முறை சங்கம், நாராயணன் பிள்ளை உறவின்முறை சங்கம், வேளாளர் எழுச்சி சங்கம், வேளாளர் பேரவை, வேளாளர் முன்னேற்ற சங்கம், வேளாளர் உறவின்முறை சங்கம் என்ற பிற சங்கங்கள் சின்னமனூரில் செயல்பட்டு வருகிறது. மேற்படி ஏழு சங்கங்களுக்கும் சுழற்சி முறை தீர்ப்பாணை கட்டுப்பட்டது என்றால் சரியில்ல, வேளாளர் பெருமக்கள் சங்கத்திற்கும், மலைய கவுண்டர் வகையறா, கச்சைக் கட்டி வகையறா, கவுண்டர் வகையறாக்களுக்கு தீர்ப்பாணை கட்டுப்பட்டது. வழக்கு தாக்கல் செய்துள்ளார் உள்ள பரம்பரை கவுடர் ஜாதி நாட்டாண்மை ஆகும். மண்டகப்படி நடைபெற்ற தேதியில் புகைப்படம் வீடியோ எடுக்கப்பட்டதா என்றால் இல்லை, செல்போனில் படம் எடுத்தார்கள். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மண்டகப்படி நடைபெற்ற நாளில் எங்களை காத்திருக்க வைத்தார்கள் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3) காலை சாமி அழைப்பில் காத்திருக்க வைத்து தான் அதன் பின்னர் சாமி வழிபாடு முடித்து அனுப்பி வைத்தார்கள். அந்த சமயம் சாமிக்கு இரவு பூஜை, புனஸ்காரங்கள் எதுவும் செய்யவில்லை. மேற்படி சங்கதியை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லி உள்ளேன். இவ்வழக்கின் 3-ம் பிரிதிவாதி முருகனாகும். முருகனாலும், மோகனாலும் அன்று

பிரச்சனை ஏற்பட்டது. மண்டகப்படி என்று மின்விளக்குகள் அலங்காரம் செய்வது, பூஜைக்கு ஏற்பாடு செய்வது, அனைத்து ஏற்பாடுகளையும் வாதி சங்கமும் மற்றும் மூன்று வகையறாக்களும் சேர்ந்து தான் செய்வோம். அன்றைய தினம் பூஜை பொருட்கள், பட்டு வேஷ்டி மற்றும் அனைத்து பூஜைக்குரிய சாமான்களை வாங்குவது வாதி நிர்வாகத்தின் பொறுப்பு என்றால் சரிதான்.

4) முதல் மரியாதை செலுத்துவதற்கு பட்டு துணி நாங்கள் வாங்க மாட்டோம் கோவில் நிர்வாகத்தில் இருந்து தான் வாங்கி வருவார்கள். மண்டகப்படி நடைபெற்ற நாளில் எங்களால் எந்த பிரச்சனையும் அன்று ஏற்படவில்லை என்று சொல்லி உள்ளேன். தேவாரம், திருவாசகம் பாடசாலை நடத்துவது சிவ சிவ தனுசு வாத்தியம் வாசிப்பதும், இந்த மண்டகப்படிக்கு தொடர்பானதா என்றால் தொடர்பு உண்டு. தேவாரம், திருவாசகம் பாடசாலை நடத்துவது சிவ சிவ தனுசு வாத்தியம் நடந்தது என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, மண்டகப்படியே நடைபெறவில்லை. தேவாரம், திருவாசகம் பாடசாலை நடத்துவது சிவ சிவ தனுசு வாத்தியம் ஆகியவை எங்களுடைய தனிப்பட்ட கலாச்சாரத்திற்கு உட்பட்டது என்றும் அதற்கும் இந்து சமய அறநிலைத்துறைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

5) மண்டகபடி அன்று சுமார் ஒரு லட்சம் முதல் 1 1/4 லட்சம் வரை செலவு செய்திருப்போம். அந்த கணக்கு பராமரிப்பு சங்க பொருளாளர் செய்வார். அந்த வரவு செலவு நோட்டு இன்றுவரை சங்கத்தில் உள்ளது. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் விமர்சையாக மண்டகப்படி நடைபெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மண்டகப்படி நடைபெற்ற மறுநாள் காவல் நிலையத்தில் வைத்து கோவில் நிர்வாக அதிகாரி மற்றும் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம், அந்த பேச்சுவார்த்தைக்கும், இந்த வழக்கு பரிகாரத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல, தொடர்பு உள்ளது. காவல் நிலையத்தில் கோவில் நிர்வாக அதிகாரி நான் இல்லாததால் பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்றும் கோவில் நிர்வாகத்தின் தவறு என காவல்துறையில் தெரிவித்தார். நான் சொல்வது முதல்விசாரணைக்கு முரண்படாக உள்ளது என்றால் சரியல்ல.

6) பிற சமுதாய மண்டகப்படி என்பது செட்டியார் சமுதாயம், நாயக்கர் சமுதாயம், நாடார் சமுதாயம் என பல சமுதாயத்தை குறிப்பிட்டு சொல்லி உள்ளேன். தினம் அன்றைய தினம் மற்ற 15 மண்டக படிதாரர்களும் எங்களுடைய மண்டகப்படியில் சங்கரன், சி.டி.ராமசாமிபிள்ளை வகையறாவில் முருகன், குருக்கள் பள்ளி சமுதாயத்தில் பாரி ஆகியோர் கலந்துகொண்டார்கள். 25.04.2018ம் தேதி தாவா வழக்கு தாக்கல்

செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது எத்தனை பேர் கலந்துகொண்டார்கள் என்றால் வாதி சங்க நிர்வாகிகளும், 3 வகையறாக்களும் கலந்து கொண்டார்கள். எங்கள் சங்கத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் கணக்கு வழக்குகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளோம்.

7) வாதி சங்கத்தை தவிர மற்ற மூன்று வகையறாக்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்களா என்றால் இல்லை. அன்றைய தினம் இந்து சமய அறநிலைத்துறை சார்பில் முறையாக செய்ய வேண்டிய அனைத்து சமய சடங்குகளையும் செய்து முடித்து விட்டார்கள் என்றும், எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையை மனதில் கொண்டு இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, கோவில் நிர்வாகத்தின் மீது தான் தவறு, மூன்று வகையறாக்களில் பிரதிநிதிகளின் பெயரில் தான் மகேந்திரன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி சங்கதி வாதி தாக்கல் செய்துள்ள பிராதில் வாதுரை செய்யப்படவில்ல என்பதால் என்னுடைய மேற்படி சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிவுற்றது)

ஓம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.